தொகுதி- ௫௬

பகுதி- ௧

Vol. 56

No. 1

செந்தமிழ்

திருவள்ளுவர்

ஆண்டு 1991

சார்வரி–சித்திரை

APRIL-1960

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு

உ

உள்ளுறை

1. எது திறனாய்வு?
(ச. அகத்தியலிங்கம் M. A, B. Sc.,) 1

2. கல்லும் கலையும்
புலவர் இரா. இளங்குமரன் 6

3. சிலப்பதிகார உலவாக்கட்டுரை
வித்துவான் நா. இராமய்யாபிள்ளை M. A., 12

4. இளம்பூரணர் எழுத்துரை
ஆ. சிவலிங்கனார் மயிலம், 16

5. குறிப்பு வினை
டாக்டர் வி. ஐ. சுப்பிரமணியம், எம். ஏ. பி. எச்டி. 20

6. நல்லவர் யாவரோ?
கீரன் தந்தை 31

"செந்தமிழ்" ஆசிரியர் குழு

1. நிர்வாக ஆசிரியர். தமிழவேள். திரு. பி. டி. இராசன். B. A., (Bar-at-Law) M. L. C.
2. திரு. சித்தாந்தகலாநிதி, பேராசிரியர், ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை. தியாகராசர் கல்லூரி, மதுரை.
3. டாக்டர். திரு. மா. இராசமாணிக்கனார் M. A. L. T. M. O. L. Ph. D சென்னை.
4. திரு. பேராசிரியர், பி. சோதிமுத்து. M. A. B. D.
5. திரு. முகமது சுல்தான் M. A. B. L. வழக்குரைஞர், மதுரை.
6. திரு வி. சண்முகசுந்தரம் M. A. B. L. செயலாளர், மதுரைத் தமிழ்ச்சங்கம். அரசாங்க வழக்குரைஞர், மதுரை.
7. திரு. கி. பழநியப்பன், துணைத்தலைவர், மதுரைத் திருவள்ளுவர் கழகம்
8. வித்துவான். திரு. கு. மா. திருநாவுக்கரசு, பொறுப்பாசிரியர், தமிழ்விரிவுரையாளர், செந்தமிழ்க்கல்லூரி, மதுரை.

உ

கடவுள் துணை

செந்தமிழ்

தொகுதி. ௫௬ Vol. 56	திருவள்ளுவர் ஆண்டு 1991 சார்வரி–சித்திரை 1960 — April	பகுதி. ௧௨ No. 12

எது திறனாய்வு?

(ச. அகத்தியலிங்கம் M. A., B. Sc.)

ஆராய்ச்சி மாணவர் கேரளப் பல்கலைக்கழகம்.

(373-ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதனால் "மோல்டன்" 'தேய்னே' போன்ற அறிஞர்கள் 'திறனாய்வாளர்கள் வசை பாடுதலே கூடாது.' என்று கூறும் அளவுக்குச் சென்றனர். இதனால் நூலின் குறைகளைக் கூறுதல் கூடாது என்பது பொருளன்று. குறைகளைக் காணும் ஆசிரியன் திருந்துமாறு கூறுதலும் அதோடு அவன் நிறைகளைக் கூறுதலும் நன்மை பயக்கும் பணியாகும்.

ஒரேயடியாக ஒரு நூலைப் புகழ்தலும் நன்மை பயக்காது. இந்த நிலை ஏற்படுமானால் சிறந்த நூற்கள் தோன்ற முடியாத நிலை ஏற்பட்டுவிடும். எதை எழுதினாலும் வரவேற்பு உண்டு என்ற எண்ணத்தில் ஆசிரியர்கள் எழுதத் தொடங்கிவிடுவர். புற்றீசல் போன்று தாழ்ந்த நூற்கள் பல தோன்றி இலக்கிய உலகத்தைக் களங்கப்படுத்திவிடும்,

எனவே இரண்டு நிலையிலும் செல்லாது உண்மை கூறுவது தான் திறனாய்வாக அமையமுடியும். [1]

ஒப்பு நோக்குதல்:

ஒரு நூலை மதிப்பிடும்போது அந்நூலின்கண் கூறப்பட்டிருக்கும் கருத்துக்கள் பிற நூற்களில் எவ்வாறு கூறப்படுகின்றன என்று கண்டு ஒப்பு நோக்குகின்றனர். இவ்வாறு ஒப்பு நோக்குதல் ஆசிரியனது சிறப்பினை எடுத்துக்காட்டும். அதோடு படிப்போருக்கும் நன்மை தருவதாக அமைகிறது. செய்தியை நன்றாகப் புரிந்துகொள்ளவும் இது பயன்படுகிறது. எனவே நூலின்கண் கூறப்படும் செய்திகளைக் கண்டு அனுபவிக்க இம்முறை நன்கு பயன்படுகிறது. ஆனால் சில திறனாய்வாளர்கள் ஒப்பு நோக்குதலே சிறந்த திறனாய்வு என்றும் ஒரே செய்தியைப் பல்வேறு ஆசிரியர்கள் எவ்வாறு கூறிச் செல்லுகின்றனர் என்று காணுவதே திறனாய்வு என்றும் கருதுகின்றனர், ''திறனாய்வு என்பது மனித அறிவைச் சார்ந்த எல்லாத் துறைகளிலும் அவ்வத் துறைகளில் ஒப்புமை நோக்கல் ஆகும்'' என்றார் திரு. ராபர்ட்சன் [2]

விதிகள் உருவாக்குதல்

ஒரு நூலை மதிப்பிடுகின்றபோது அதன் பலவேறு தன்மைகளைக்காணுகின்றான் திறனாய்வாளன். அதன் சிறந்த பகுதிகளைக் காணும்போது திறனாய்வாளன் அவைகளை அந்நூலின் சிறப்புக்குரிய அளவு கோலாகக் கொண்டு விடுகிறான். இந்நிலைமை ஏற்படும்போது ஒரு நூலுக்குரிய சிறப்புத்தன்மையைப் பொதுவான ஒருகொள்கையாக

---

1. Criticism is to see the object as in itself it really is.
— Mathew Arnold.

2. Criticism is a Process of comparison. Criticism is a Process that goes on over all field of human knowledge being simply comparison or clash of opinion. — Robertson.

All genuine criticism consists in comparison between two ways of doing samething.

மாற்றி விடுகிறான். எனவே ஒரு குறிப்பிட்ட நூலைத் திறனாய்வு செய்யும் அவன் அந்நூலினின்றும் சில விதிகளையும் கொள்கைகளையும் உருவாக்குகிறான். இத்தகைய நிலை ஏற்படும் போது திறனாய்வு என்பது மதிப்பிடுதல் என்ற நிலை மாறி ஒருவகை நூல் எழுதுவதற்குரிய கொள்கைகளை உருவாக்குதல் என்ற நிலை ஏற்பட்டுவிடுகிறது.

எடுத்துக்காட்டாக அரிஸ்டாட்டிலின் துன்ப நாடகக் கொள்கைகள், காப்பியக் கொள்கைகள் முதலியவற்றைக் காட்டலாம். தனக்கு முன் தோன்றிய நூற்களை ஆராய்ந்து அவைகளில் சிறந்த செய்திகளைக் கண்டார். அச்செய்திகளைப் பொதுவாக்கித் துன்ப இயல் நாடகங்களின் இலக்கணங்களை வகுத்தார். நாடகங்கள் இவ்வாறுதான் இருத்தல் வேண்டும் என்றும் காப்பியங்கள் இவ்வாறுதான் ஆக்கப்படல் வேண்டும் என்னும் எண்ணங்கள் எழலாயின. இப்போது திறனாய்வாளர்கள் காணுகின்ற இலக்கியங்கட்கு ஆய்வு செய்வது இன்றி எவ்வாறு இலக்கியங்கள் தோன்ற வேண்டும் என்ற எண்ணத்தைக் கூறுகின்றவர்களாக மாறுகின்றனர்; இலக்கிய ஆசிரியர்கட்கு வழி வகுத்துக் கொடுக்கின்றனர்.

சிலப்பதிகாரத்தைக் கண்ணுற்ற பின் அதில் காணப்படும் பல்வேறு செய்திகளைப் பொதுவாக்கிக் காப்பிய இலக்கணங்களாக வகுத்துவிட்டனர் இலக்கண நூலார். பின்னர் காப்பியங்கள் அனைத்தும் இவ்வாறே இருத்தல் வேண்டும் என்று கூறிக் கவிஞர்களின் கற்பனை ஓட்டத்துக்குத்தடையும் இடுகின்றனர்.

விதிகளைப் பொருத்திக்காணுதல்:

இன்னும் சில திறனாய்வாளர்கள் இந்த அளவில் நின்று விடுவதில்லை. அவ்விதிகளைப் பிற இலக்கியங்களில் பொருத்திக் காணுகின்றனர். அவ்வாறு காணும்போது அவை பொருந்தாவிடின் அவ்விலக்கியங்களின் தனிச்சிறப்

பினைக் காணாது இகழ்ந்தும் விடுகின்றனர். சிலப்பதிகாரத்தினின்றும் எழுகின்ற கொள்கைகளைச் சிந்தாமணியிலும், பெரிய புராணத்திலும் பிற இலக்கியங்களிலும் பொருத்திக் காணுகின்றனர். காணுகின்றபோது சிலர் "சீவகன் தன்னிகரில்லாத் தலைவன் அல்லன்; அவன் அன்பு பல்லோரிடம் செல்லுகிறது; எனவே சிந்தாமணி சிறந்ததன்று" என்று கூறுகின்றனர். பெரிய புராணம் பெருங்காப்பியமா? அதன் தலைவன் யார்? என்றின்னோரன்ன பல வினாக்களை எழுப்பி "அது பெருங்காப்பியமன்று" என்றும் "பெருங்காப்பியம்" என்றும் கூறுகின்ற நிலையினையும் நாம் காணுகின்றோம். இந்நிலைக்குக் காரணம் பெருங்காப்பிய இலக்கணங்களை இவற்றுள் பொருத்திக் காணுவதுதான். ஒவ்வொரு நூலுக்கும் உரிய தனித் தனிச் சிறப்பினைக்கண்டு, ஆசிரியரின் எண்ணத்தையும் ஊடுருவி உணர்ந்து, அவ்வெண்ணத்தில் ஆசிரியர் எவ்வளவு வெற்றிபெற்றுள்ளார் என்றுகாணுவது நன்மைபயக்கும். தோன்றிவிட்ட சில விதிகட்காக, பிற சிறப்புகளைக் கவனியாது திறனாய்வு செய்வது புதுவகை இலக்கியங்கள் தோன்ற இடையூறு பயப்பதாகும். எதுஎவ்வாறாயினும் இத்தகைய நிலையும் திறனாய்வு என்று கருதப்பட்டு வந்தமை உண்மையாகும். அமெரிக்கக் கலைக்களஞ்சியம் இதுபற்றிக் கூறுகிறது. "சுருங்கக் கூறுமிடத்துத் திறனாய்வு என்பது ஒரு குறிப்பிட்ட வேலைப்பாட்டின் அழகினையும் குறையினையும் பற்றிக் காணுவதுள் அடங்கியுள்ளது. ஆனால் திறனாய்வு என்பது சில கொள்கைகளை உருவாக்குவதிலும் அக்கொள்கைகளை இலக்கியங்களிலோ அன்றிக் கலைகளின் கண்ணோ பொருத்திக் காணுவதையும் உள்ளடக்கி நிற்பதைக் காணலாம்" என்பது அந்நூல் குறிப்பாகும். [1]

1 In its narrow sense the art of criticism is confined to the study of the beauties or defects of some particular work. Yet there is a broader sense too in which the term includes the establishment as well as the application of principles.

— Encyclopaedia Americana.

பகுத்து வகுத்துத் தொகுத்துக் கூறல்:

ஒரு நூலைப் பற்றிய திறனாய்வு நூலைக் கற்கும்போது படையல் நூலைப்பற்றி நாம் நன்குதெரிந்து கொள்ளும்படியான ஒரு வாய்ப்பு ஏற்படவேண்டும். திறனாய்வாளன் அசல் நூலை நன்கு கற்று அந்நூலின் சிறந்த பகுதிகள். ஆசிரியரின் போக்கு, முழுமையாக அவ்வாசிரியர் அந்நூலின் கண் என்ன கூற விரும்புகிறார் என்பனபோன்றவற்றை அறிந்து அதைப் பிறருக்குக் கூற விரும்புகிறான். இவற்றைக் காண அவன் அந்நூலை நன்கு பகுத்து, பல்வேறு இடங்ககளில் சிதறிக் கிடக்கும் ஒற்றுமைப் பொருட்களை ஒன்று சேர்த்துக்கூறும்போது சிறந்த பயன் அடையலாம்.

சிலப்பதிகாரம் கூறும் உண்மைகள் பல. அவற்றுள்ளும் சிறந்தவை சில. இவற்றைப் பல்வேறு இடங்களில் ஆசிரியர் வற்புறுத்துவார். வற்புறுத்துவதிலும் பல்வேறு முறைகளைக் கையாண்டுள்ளார். அவற்றையெல்லாம் திறனாய்வாளன் தன் கூர்த்த மதியால் கண்டு திரட்டிப் பல்வேறு நிலையில் வகுத்துக் கூறும்போது நாம் நன்றாக உணர முடிகிறது. எனவே படையல் இலக்கியத்தை நன்கு நாம் புரிந்துகொள்ள இம்முறை பயன்படுகிறது.

உண்மைகூறுதல்:

திறனாய்வுக்கலை வளர வளர மதிப்பிடுதல் தேவையா? என்ற எண்ணம் வளர்ந்தது. திறனாய்வாளன் நடுநிலையினின்றும் நூலை ஆராய்ந்து அவை கூறும் உண்மைச்செய்திகளைக் கூறுவதே திறனாய்வு'[1] என்ற எண்ணமும் எடுபட்டது. இந்நிலைக்கு முழு உருவினைத் தந்தவர் திரு. மாத்யூ ஆர்னல்ட் என்பவராகும். திறனாய்வாளன் நூலைப்பற்றிய தனது கருத்தைக் கூறவேண்டியதில்லை.

---

1. It is the business of the critical power to see the object as in itself it really is. — Mathew Arnold.

சிறந்தவற்றைக் கூறல்:

ஆசிரியர்களின் பிழையினைக் காணுதலே திறனாய்வு என்று கருதிய நிலையினைக் கண்டோம். அதுபோன்று ஆசிரியர் கூறியவற்றுள் சிறந்தவற்றைக் கூறுதல்தான் திறனாய்வு என்ற நிலையும் உண்டாயது. இந்த நிலையைக் கூறியவரும் திரு. மாத்யூ ஆர்னல்ட் என்பவரே.[2]

எனவே இதுகாறும் கூறியவற்றால் திறனாய்வு என்றால் என்ன என்பதற்குரிய பல்வேறு விளக்கங்களைக் கண்டோம். இவைகளில் ஒன்றேனும் தனியாக நின்று திறனாய்வின் முழுமை விளக்கத்தைத் தரவில்லை. பலர் பல்வேறு நிலைகளில் கூறியுள்ளனரேனும் பொதுவாகநோக்கும் இடத்து எல்லா விளக்கங்களும் அமைந்து காணுகின்ற ஒரு பொது நிலையே சிறந்த திறனாய்வாக அமையும் என்பது உண்மையாகும். ஆசிரியர்களை நன்றாகப் புரிந்து கொள்ளுவதே திறனாய்வின் பயனாக இருத்தல் கண் கூடாகும். இந்த நிலையை எது தருகிறதோ அதுவே சிறந்த திறனாய்வு.

கல்லும் கலையும்

புலவர். இரா. இளங்குமரன், மு. மு. உயர்பள்ளி,
திருப்பரங்குன்றம்.

"கல்" என்பது ஓர் ஒலிக்குறிப்பாகும். இயற்கையி னிடை வாழ்ந்து இன்பங்கண்ட ஆய்வு நலமிக்க முன்னோர் ஆரவாரத்தைக் குறிக்கும் இடங்களிலெல்லாம் "கல்" என்னும் ஒலிக்குறிப்பைப் பயன்படுத்தியுள்ளனர்.

---

1 It is the business to know the best that is known and thought in the world.

Criticism is a disintersted endeavour to learn and propogate the best that is known and thought in the word.

Mathew Arnold.

படையணிச் செலவும், பாசறை நிலனும், பேரூர் மறுகும், சீறூர் மன்றமும், கார்க்கடல் அலையும், கடிப்பிணை முரசும், நீர்வழி தூம்பும், கார்செறிவானும்—இன்ன தன்மைய பலவும் "கல்" என்னும் ஆரவாரத்தை உடையன என்பதை இலக்கியங்களில் பெருகக் காண்கின்றோம்.

"கல்லென் கடல்கண்டன்ன கண்ணகன்தானை"
புறம் 351
"கல்லென் பாசறை" 301
"கல்லென் பேரூர்" ... சிலம்பு 12:12
"கல்லென் சீறூர்" ... ஐங்குறு: 382
"கல்லென் கடற்றிரை" ... சீவக 2097
"கல்லென் முரசம்" 1063
"கல்லென் தூம்பு" 1280
"கல்லெனத் துவன்றிக் கண்கிளர்ந்ததுபோல்'
பெருங் 1: 55: 113.

என்னும், படை முதலாய இவற்றின் ஒளி ஒரு வழியே கல்லென ஒலிப்பதில்லை. பலதிறப்பாடுற்றதாகும். இருப்பினும் தொல்பெரும் இலக்கியங்கள் 'கல்'லெனும் ஒலிக் குறிப்பைப் பயன்படுத்துவதிலிருந்து அதற்கோர் தகவுடைய காரணம் இருந்தேயாகவேண்டும் என்பது உண்மையாகின்றது.

உலகத் தோற்றத்தே முதலாவதாக விண்ணும், அதன் பின் முறை முறையே வளியும், தீயும், நீரும், மண்ணும் தோன்றின என்பது ஆய்வியல் முடிவு. இறுதியான மண்ணின் தோற்றத்திலும் 'கல்' தோன்றிய பின்னரே மணலும் மண்ணும் தோன்றின என்பதும் தெளிவு. ஆதலால் கல்லே நிலத்தோற்றத்தின் தாய் எனலாம்.

இது இவ்வாறாக, தமிழ்க்குடியின் தொன்மை கூற வந்த ஆன்றோருள் ஒருவர்,

'கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளோடு
முன்தோன்றி மூத்தகுடி"

எனக் கூறினர். இக்கூற்றுள் தமிழ்க் குடியின் தொன்மையே அன்றி நிலத்தோற்றத்தின் முறைமையும் தெளிவாக்கப்படுகின்றது. கல் தோன்றிவிட்டது; ஆனல் மண் தோன்றவில்லை! மண் தோன்ருத காலத்தே தமிழர் தோன்றினர் என்பதனல் தமிழர் பழமையும், கல்தோன்றியும் மண் தோன்றவில்லை என்பதனல் கல்லின்பின் மண் தோன்றியது எனப் படைப்பு முறைமையும் தெளிவு ஆக்கப்படுகின்றது. ஆனல் இங்கே காட்டப்பெற்ற கல் (மலை) தோற்றமுற்றுவிட்டாலும் 'கல்' என்னும் பெயருடன் தோன்றியிருக்க முடியாது.

ஒரு பொருள், தோன்றியபின்னரே அதன் இயல்புக்கு ஏற்பப் பெயரமைப்பதும், அமைவதும் இயற்கை, அதுவே வளமிக்க மொழியும், ஆய்வுநலமிக்க அறிஞரும் கொள்ளும் நெறி. கல் தோன்றி, மண் தோன்றி, உயிர்தோன்றி, உணர்வுடைய மனிதன் தோன்றி, வாழத்தொடங்கி, உலகத்தே உருண்டு, புரண்டு, தவழ்ந்து, தாவி நடந்து பழகியும், ஆட்டி, அசைத்து, நீட்டிக் குவித்துத் தசைப்பயிற்சி செய்தும், குழறி, உளறி, சிரித்து, உரப்பி, ஒலித்துக் கருத்து வெளியிட்டும் வாழ்ந்த பின்னரே மொழியுணர்வு தோன்றியிருக்கக் கூடும். இவ்வாறு முதற்கண் தோற்றமுற்ற சொற்களும் எளிய ஓசையும், இயற்கை அமைதியும், பல்பொழுதும் கேட்டறிந்த வாய்ப்பும் உடையதாக இருந்தே தோன்றியிருக்க முடியும். இவற்றையெல்லாம் நோக்குங்கால் மாந்தன் கருத்தைக் கவர்ந்த சொற்களுள் 'கல்'லும் ஒரு சொல்லாக இருந்திருக்கலாம். அன்றியும் அவன் கண்ட முதன்மைச் சொற்கள் சிலவற்றுள் ஒன்ருகவும் நின்று இருக்கலாம்.

கல் தோன்றி விட்டது; மண்ணும் தோன்றி விட்டது; உயிரும் பிறவும் தோன்றிவிட்டன. நீர் கொண்டு நெடுவான் பரவிய முகில் கடனாற்ற, இயற்கையன்னை மெய் குளிர்ந்து வண்ணப் போர்வை போர்த்து வனப்பு மிக்க

கன்னியாக விளங்கினள். வானைத்தொடும் மலையும், வானத்து மீனை நிகர்க்கும் சுனையும் பற்பல இடங்களில் இலங்கின. இவற்றைக்கண்டு உள்ளம் பறிகொடுத்த மொழிவளம் பெருத முதுகுடிகள் தங்களுக்குள் சுவைத்துச் சுவைத்துத் திளைத்தனர். முட்டி முடுகித் தத்தித்தாவி ஆரவாரத்தோடு எழும் ஒலியில் செவியையும், காட்சியில் உள்ளத்தையும் தந்து நின்றனர். கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து, உற்றறிந்து பல வழிகளிலும் பொறிபுலன்களைச் செலுத்தினர்.

அருவி வீழும் அழகும் ஒலியும் அவர்கள் புறக்கண்ணையும் புறச்செவியையும் விட்டு அகலினும், அகக்கண்ணையும், அகச்செவியையும் விட்டு அகல்வதாக இல்லை. அவ்வருவியின் ஒலியிலே ஒன்றிய ஒரு பெருமகன் காதில் அவ்வொலி ''கல்'' என ஒலித்திருக்கவேண்டும். 'கல்' என ஒலித்து அவ்வொலியாலேயே அவன் அருவியைக் குறித்திருப்பான். பின்னர், கல்லெனும் ஒலி அருவியையும், அருவி சார்ந்த பகுதியையும் குறிப்பதாக மாறி யிருக்கக் கூடும். அதன் பின்னரே மலைக்கும் காரணம் கருதிய பெயராய் வழிவழி வளர்ந்திருக்கவேண்டும்.

''காகா'' என்னும் ஒலியுடைய பறவையைக் காக்கை என்பதும், கூ கூ என்னும் ஒலியுடைய பறவையைக் கூகை என்பதும் இன்னும் வழக்கில் உளவாதலைக் காண்கின்றேம். இதுபோன்றே, கல்லெனும் ஒலியுடன் வீழும் அருவியும், அருவி சூழும் இடமும் கல்லாகக் காரணம் குறிக்கப் பெற்றது தெளிவாகும். மொழி வளமுற்ற காலத்தே ''கல்லலைத் தொழுகும்'' ''கல்லெனை அறையும் ஒல்லென் கம்பலை'' ''கல்லெனக் கரைந்து வீழும் கடும்புனல் குழவி'' என இன்னவாறு கூறியோரும் பறையும் முரசும்போல முழக்கும் அருவி என்றும், அருவி தாலாட்டக் கண் துயிலும் யானை என்றும், மயிலாட்டத்திற்கு அருவி பறையடிக்கின்றது

என்றும் விவரித்தோரும் உளர். 'கல்' எனத் தத்தி நீர் விழும் மதகுக்குக் கலிங்கில், கலிங்கு என்ற பெயர்கள் உண்மை கண்கூடு. கலிங்கில் பெயரால், பெயர்பெற்ற ஊர் களும் உண்டு. கலிங்கப்பட்டி, கலிங்கல் மேட்டுப்பட்டி என்பன அவற்றுள் சில.

கல்லெனும் ஒருமை ஒலி காலம் செல்லச் செல்லப் பல் வேறுபட்ட ஒலிகளைக் குறிப்பதற்கும் பயன்படுத்தப் பெற லாயிற்று. அதுபோழ்து, ஒரு சிறு மாற்றமும் பெற்றது. கல் எனும் ஒலிக்குறிப்பு, கலியாயிற்று, மிகுதி, ஆரவாரம் துள்ளல் ஆகிய பொருள்களிலெல்லாம் பின்னோர் வழங்கு மாறுன பெருமிதச்சொல்லாகக் கலிகின்றது. இதனுல் "கலி கெழுகடவுள்", "கலி கெழுகூடல்" "கலி கெழுபாக்கம்" "கலி கெழுமறுகு" "கலி கேழ் ஊர்", "கலி கெழுமீமிசை" என மிகு வொலியைக் குறிப்பது காண்க.

முதல் மனிதன் இயற்கையில் அமைந்த மலைப்பிளவு, குகைகளுக்கிடையே தன் வாழ்வைத் தொடங்கினுன். எனி னும் கொடு விலங்குகளும் பருவ வேற்றுமைகளும் அவனை வாளா விருக்க விட்டுவைக்கவில்லை. சற்றே அவனைத் தூண் டிற்று. கல்லை உடைக்கவும், அதனைக் கூர்மையாக்கவும், பாறைகளைக் குடையவும் முயன்று வெற்றியும் கண்டான். பருவகாலத்தின் கொடுமையை அழிக்கக் கண்ட கல்வீடும், கடுவிலங்கை அழிக்கக் கண்ட கற்கருவியும் அவ்வளவோடு விடாமையால் ஓய்வு ஒழிவு நேரங்களிலெல்லாம், கல்லில் சில பல உருவங்களைத் தீட்டி உவக்கும் நிலைக்கு வளர்ந்தான். இக்காலத்தும் அவன் அருவியை மறந்தான் இல்லை; அதன் ஒலியை மறந்தான் இல்லை. கல்லினின்று செதுக்கியும், துளைத்தும் ஆக்கிய அவன் தொழிலைக் 'கல்' என்பதன் வழி யாகக் 'கலை' என்பதாலேயே குறித்தான். கல்லின் விளைவே கலையாயிற்று. கல் தொழிலுக்கு மட்டும் கலை என்று பெயர் வைத்த அவன் வழி வழி வந்த மாந்தர் அழகும் கவர்ச்சியும்

தரும் அனைத்தையும் கலை என்ற பெயராலேயே அழைக்க லாயினர்.

கல்லிலிருந்து கலைகண்ட மாந்தன் தோண்டிச் செய்யும் அனைத்துப்பொருளையும் கல்லைப் பொருளாகக் கருதினன். இதனாலேதான் அவன் ஆடையாகப் பயன்படுத்திய மரத் தோலும் விலங்குத் தோலும் கலை என்ற பெயரால் குறிக் கப்பெற்றன. ஆனால் இவ்வளவு மாற்றங்களைப் பெறுமுன் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் கடந்திருக்கக்கூடும். அதனால் மனிதன் அறிவும் உணர்வும் பெருகி மொழி வளமும் பெற்று உண்பதும், உடுப்பதும், உணர்வதும் அன்றி வேறுபல தேவைகளுக்கும் ஆசைகளுக்கும் ஆட்படலானான். அதன் விளைவாக அவன் சில பல பொருள்களைத் தோற்றுவிக்க முனைந்தான். இவையும் கலையழகு பெறச் செய்யப்படலா யின, இதனால் கலையழகு தவழ அவன் கண்ட பொருள் களைக் "கலம்" என்ற பெயரால் அழைத்தான். அவையே உண்கலம், அணிகலம், படைக்கலம். இவை வனைகலம், புனைகலம், தொடுகலம் என்றும் வழங்கப்பெற்றன.

கல்லெனும் ஒலி வளர்ந்து பெருகிய வகை இவ்வாறாக, இன்று கல்வி என்பதும் தோண்டி எடுப்பது என்ற பொரு ளொடுதான் வழங்கப் பெறுகின்றது. கல் என்னும் தோண்டுதல் பொருளில் வழங்கிய கலைமட்டும் இப்பொ ழுது அழகு மல்கி, உணர்வைத்தூண்டி, அறிவை வளர்த் துச் செம்மை தரும் அத்துணை வனப்புக்களுக்கும் பொது மைப் பெயராக மாறிவிட்டது.

மரத்தினால் அமைந்த அளவைக் கருவி தகடாக இன்று மாறி நின்றும், மரக்கால் என்னும் பெயரே பெற்று வரு வதுபோல் எள் நெய்யான எண்ணெய் என்னும் சொல் பொதுமையாகிக் கடலை எண்ணெய், தேங்காயெண்ணெய் என்றானாற்போல் கலையின் பொருளும் இயலும் மாறிக் கொண்டாலும் பெயர்மட்டும் மாற்றமுறாது நிற்பது வியப் புக்குரியதே.

சிலப்பதிகார உல்வாக் கட்டுரை

வித்துவான். நா. இராமய்யா பிள்ளை M. A.

காவிரிப்பூம் பட்டினம் கடல் வாணிகத்தில் சிறந்திருந்தது. பல நாட்டு வணிகர்களும் அங்குக் கூடியிருந்து வணிகம் நடத்தினர். எனவே அங்குக் கிடைக்காத பொருள்கள் இல்லை.. எல்லாப் பொருள்களையும் அங்குக் காணலாம்; வாங்கலாம். வணிகப் பெருமையில் சிறந்திருந்த நகரம் பூம்புகார் நகரம்.

எல்லாப் பொருள்களும் கிடைப்பதனுல் எல்லா இன்பங்களையும் அங்கு நுகரமுடியும். அச்சிறப்புறு நகரத்திலே பொருள்வளம் நிரம்பிய இரு வணிகருடைய செல்வனுக்கும் செல்விக்கும் திருமணம் நடந்து நிறைந்தது. திருமணம் புரிந்துகொண்ட கோவலனும் கண்ணகியும் தங்களுடைய உயர்ந்தோங்கி நின்ற மாடமாளிகையில் அழகிய கட்டிலிலே அமர்ந்திருந்தனர்.

அப்போது, நீர்நிலைகளிலே உண்டாகி வளரும் பூக்களும் மரங்களிலே பூக்கும் பூக்களும் கொடிகளிலே பூக்கும் பூக்களும் மிக்க வாசனையோடு மலிந்திருந்தன. அவற்றின் வாசனைகளைத் திரட்டிக்கொண்டு தென்றற் காற்று சாளரங்களின் வழியாக நுழைந்து கோவலன் கண்ணகிக்கு இன்பத்தைத் தந்து அலங்கரிக்கப்பட்ட சாளரத்தின் வழியே தென்றல் நுழையும்போது வண்டும் நுழைந்தது என்கிருர் ஆசிரியர். ஏனென்ருல் ஒளியுடைய முகத்தையுடைய பெண்கள் கூந்தலில் அணிந்த கலவை மணத்தைப் பெற அது மிகவும் விரும்பியது. கண்ணகி கூந்தலிலுள்ள கலவை மணம் பெற விரும்பிய வண்டு வழியறியாது திகைத்து நிற்கும்போது தென்றற் காற்று சாளரத்தின்

வழியே அதனையும் தள்ளிக்கொண்டு வந்தது. பிறர்க்கு இன்பமூட்டுவது தென்றலின் தொழிலல்லவா! கோவலன் கண்ணகிக்கு இன்பமூட்டுவதோடு வண்டிற்கும் உதவி செய்ததாக ஆகட்டுமே!' என்று கருதிற்றுப்போலும் தென்றல்.

மணம் நிறைந்த தென்றலை நுகர்ந்த மணமக்கள் காதல் மீதூரப் பெற்றூர்கள். காலம் பார்த்திருந்த மன்மதனும் கணையை எய்தான். கணையை ஏற்ற கோவலனும் கண்ணகியும் நிலா முற்றத்தை அடைந்தனர். மலர்கள் பரப்பப்பட்ட சேக்கை ஒன்றில் அமர்ந்தனர். அக்காட்சி ஞாயிறும் திங்களும் ஒருசேர இருந்த காட்சி போல இருந்தது. கரும்பு, வல்லி என்பனவற்றைத் தோளிலே எழுதினுர்கள். மாலைகள் மயங்க இருவரும் மகிழ்ந்திருந்தார்கள். அப்போது நீங்காத காதலையுடையவளும் திருமகளைப் போன்ற அழகையுடையவளுமாகிய கண்ணகியின் முகத்தை நோக்கிக் கோவலன் கூறத் தொடங்கினுன். முன்பு அவன் கருதியதன்று அவன் கூறத் தொடங்கியது.

"பெண்ணே! கண்ணகி! நீ திருமகள். உன்னேடு பாற்கடலில் பிறந்தது பிறைமதி. அது சிவபெருமான் தன் திருமுடியில் தேவர்கள் போற்ற அழகுக்காகச் சூடிக்கொள்ளும் பெருமையுடையதாயிருந்தாலும் அஃது உன்னேடு பிறந்த காரணம் பற்றி உனக்குரியதாகையால் உன் நெற்றியாகட்டும் என்று கொடுத்து விடுவானுக".

"கண்மணி! போர்க்களத்திலே அரசர் வீரர்களுக்குப் படைக்கலம் வழங்குதல் மரபல்லவா! அதனை யொட்டி மன்மதனும் தனது பெரிய கரும்பு வில்லை இரண்டாக்கி உன் இருபுருவ மாகட்டும் என்று தந்து விடுவானுக"

"திருமகளே! பாற்கடலில் பிறக்கும் போது அமிழ்தத்திற்கு முன்பு நீ பிறந்தாய். அந்த அமிழ்தத்தை உண்டு

தேவர்களும் தேவேந்திரனும் இறப்பினை ஒழித்தார்கள். உன்னோடு பிறந்த இருதலையும் சூலமாய் நடுப்பகுதி சிறுத்துப் பிடியாய் அமைந்திருக்கும் வச்சிரப்படையைத்தேவேந்திரன் ஆயுதமாய்க் கொண்டான். ஆனால் அவன் உனக்கு அஃது இடையாகட்டும் என்று தரக்கடவானாக".

"அமிழ்தூறும் சொல்லாய்! ஆறுதிருமுகங்களையும் பன்னிரண்டு கண்களையுமுடைய ஒப்பில்லாத முருகன் தனது கூரிய வேலை இரண்டாக்கி உன் இருகண்களாகக் கொடுத்து விட்டான். எவ்வித சம்பந்தமுமில்லாதிருந்தும் நான் துன்பப் படுவதைத் தன் பன்னிரண்டு கண்களாலும் காணவே அவன் அவ்வாறு கொடுத்தான் போலும்!"

"நல்ல நெற்றியை யுடையாய்! நீண்ட பீலியையுடைய மயில்கள் உன் சாயலைக் கண்டு நாணிக் குளிர்ந்த காட்டை அடைந்தன."

"அன்னங்கள் உன் மென்மையுடைய நடைக்குத் தோற்று வயல்களிலுள்ள மலர்களில் புகுந்து மறைந்தன போலும்".

"பச்சைக்கிளிகள் குழலிசையையும் யாழிசையையும் அமிழ்தத்தையும் கலந்து குழைத்ததுபோன்ற உன்னுடைய மழலைச் சொற்குத் தோற்றன. எனவே உன்னை வணங்கி உன் சொல்லைக் கற்க விரும்பி உன்னுடைய மலர் போன்ற கையிலிருந்து நீங்காமல் விருப்பத்தோடு தங்கியிருக்க விரும்பின போலும்".

"மாதே! உன்னிடம் இயற்கையழகு நிரம்பியிருக்கவும், அதனையறியாது உன்னை அழகு செய்யும் மகளிர் வேறு சில அணிகளையும் அணிவது யாது கருதி என்பது எனக்கு விளங்கவில்லை. அவர்கள் அதனால் யாது பெறப் போகிறார்கள்?"

"உன் கரிய கூந்தலில் சில மலர்களை வைத்தால்போதும். ஆனால் அவர்கள் மாலையை வைத்துக் கட்டுகிறார்கள். அவ்வாறு செய்வது எதற்காக என்று எனக்கு விளங்கவில்லை.

"உன் மதிபோன்ற முகத்தில் முத்துப்போல வியர்வை தோன்றவும் உன் இடை வருந்தவும் அணிகளை அணிந்தனர். அவர்கள் பித்தேறினார்கள் போலும்" என்று சொல்லிய கோவலன்,

"மாசறு பொன்னே! வலம்புரி முத்தே!
காசறு விரையே! கரும்பே! தேனே!"

என்றும் கண்ணகி நலம் பாராட்டினான்.

பொன் ஒளியுடையது; கண்ணுக்கு இனிமையான காட்சியுடையது. முத்து உற்றறியும் தன்மையுடையது; உடலுக்கினிமையுடையது. விரை வாசனையுடையது; மூக்கால் நுகர்ந்து இன்புறத் தகுதியுடையது. கரும்பு இனிப்புடையது; நாவால் சுவைத்து இன்புறத்தக்கது. தேன் இனிமை யுடையது; தேன் போன்ற மொழியைக் காதாற் கேட்டு மகிழ்ச்சியடையத் தக்கது. எனவே கண், உடல், மூக்கு, நா, காது, ஆகிய ஐம்புலனுக்கும் ஒரே இடத்தில் விருந்துள்ளது என்று கூறும் கோவலன் உரையைக் கூர்ந்து காண்க.

கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து. உற்று அறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே உள.

என்ற வள்ளுவர் குறளும் காணத்தக்கது.

இம்மட்டோடு கோவலன் ஆவல் கண்ணகியைப் பாராட்டுதலில் நின்றுவிடவில்லை. "பெறுவதற்கரிய பாவை போன்றவளே! அரிய உயிரை நிலைபெறச் செய்யும் மருந்து போன்றவளே! பெருங்குடி வாணிகன் பெருமட மகளே! உன்னை மலையிற் பிறவாத மணி என்பேனா? கடலிற் பிறவாத அமிழ்தம் என்பேனா? யாழிற் பிறவாத இசை என்பேனா? யாதென்று சொல்லி மகிழ்வேன்" என்றும் கோவலன் உலவாக் கட்டுரை பல பாராட்டினான்.

இவ்வாறு பாராட்டி மகிழ்ந்து வாழுகின்ற நாட்களில் ஒருநாள், கோவலன் - கண்ணகியை அறவோர்க்களித்தல், அந்தணரோம்பல், துறவோர்க் கெதிர்தல், விருந்து புறந்தருதல் ஆகிய இல்லறம் ஆற்றி உயர்ச்சி பெறப் பெற்றோர்கள் வேறாக இருக்கச் செய்தனர்.

இளம்பூரணர் எழுத்துரை

(ஆ. சிவலிங்கனுர், மயிலம்.)

2. நுந்தை

நுந்தை யென்ற சொல்லில் முதலில் உள்ள நகரத்தின் மேல் ஏறிய உகரம் தன் மாத்திரையிற் குறைந்து ஒலிக்கும் போது குற்றியலுகரம் எனப்படும். மொழியிறுதிக் குற்றியலுகரம் பல தொடர்களில் வருவதுபோல் இன்றி இவ்வொரு சொல்லில் மட்டும் மொழிமுதற் குற்றியலுகரம் வரும். நுந்தை என்ற சொல்லில் முதலில் உள்ள உகரத்தை இதழ் (உதடு) குவியாதும் அதாவது தன் அரை மாத்திரையிற் குறையாதும் கூறலாம். அப்போது அது பிற மொழிமுதல் உகரங்கள் போலவே முற்றியலுகரமாகும். எனவே, இவ்வொருசொல்லே இதழ் குவித்துக் கூறும் போது முற்றியலுகரமாகவும், குவியாது கூறும்போது குற்றியலுகரமாகவும் வரும் என்பது பெறலாம். இவ்விரு நிலையிலும் நுந்தை என்பதற்கு நும் தந்தை என்பதே பொருளாம், இச்சொல் முறைப்பெயர்ச்சொல்.

ஆசிரியர் தொல்காப்பியர்,

முற்றிய லுகரமொடு பொருள்வேறு படாஅது
அப்பெயர் மருங்கின் நிலையிய லான (எழு. 68)

என்ருர். "நுந்தை என்ற சொல்லின்கண் குற்றியலுகர நிற்குமிடத்து அஃது இதழ்குவித்துக் கூறவரும் நுந்தை என்ற முற்றுகரத்துடன் பொருளில் மாறுபடுதல் இல்லை" என்பது நூற்பாவின் பொருளாம். இந்நூற்பாவில் 'பொருள்' என்ற சொல்லுக்குரிய பொருள் யாது என்பது ஆய்வுக்குரியதாம்.

நச்சினார்க் கினியர்,

"அம்முறைப் பெயரிடத்தே நிற்றல் இலக்கணமான குற்றியலுகரம் இதழ்குவித்துக் கூறும் வழி வரும் முற்றுகரத்தோடு அவ்விடத்துக் குற்றுகரம் பொருள் வேறுபடுமாறுபோல ஈண்டுப்பொருள் வேறுபட்டு நில்லாது"

என்று எழுதி,

"காது கட்டு கத்து முருக்கு தெருட்டு என்பன முற்றுகாமும் குற்றுகரமுமாய்ப் பொருள் வேறு பட்டு நிற்பனபோல நுந்தை யென்று இதழ்குவித்து முற்றக் கூறிய விடத்தும் இதழ்குவியாமல் குறையக் கூறிய விடத்தும் ஒரு பொருளே தந்தவாறு காண்க"

என்று விளக்கமும் எழுதினர். காது கட்டு முதலியன முற்று கரமாயின் ஏவல்வினையும் குற்றுகரமாயின் தொழிற் பெயருமாம். நச்சினார்க்கினியர் உரையில் யாதோர் ஐயமு மில்லை. அவர் உரை பொருந்துமா பொருந்தாதா என்று வேண்டுமானால் ஆராய்ச்சியை மேற்கொள்ளலாமேயன்றி உரை விளக்கம் தேவையில்லை. ஆனால் இளம்பூரணர் உரை விளக்க வேண்டிய தொன்றாகவே இருக்கிறது. இவர் உரை,

"அம்முதற்கண் குற்றியலுகரம் ஆண்டு இதழ்குவித்துக் கூறும் வழி முற்றுகரத்தோடு பிற உகரம் போலப் பொருள் வேறுபடாது: யாண்டெனின் அம்முறைப் பெயரிடத்துத் தான் நிற்றற்கண்"

என்பதாகும். இவ்வுரையில் 'பிற உகரம் போற் பொருள் வேறுபடாது' என்பதற்கு விளக்கம் தேவை. இதற்கு நச்சி னார்க்கினியர் கருத்துக் கேற்பவே, இதழ்குவித்தும் குவியா தும் கூறப்படும் மொழியிறுதிக் குற்றுகர முற்றுகரங்கள் தம்முள் பொருள் வேறுபடுவது போல இம்முறைப் பெயர் பொருள் வேறுபடுதலில்லை' என்றே கொள்ளலாம். ஆனால் இளம்பூரணர் உதாரணம் காட்டி விளக்கவந்தபோது,

"நாகு எனவும் நகு எனவும்குறுகியும்குறுகாதும் நின்ற உகரங்கள் போல, நுந்தை யென்று குறுக்கமாய வழியும் இதழ்குவித்துக் கூறக் குறுகாத வழியும் பொருள் வேறுபடாதவாறு அறிக,"

எனக் கூறினர். காது என்ற ஒரு சொல்லே குற்றியலுகர மாக ஒலிக்கும்போது பெயராயும் முற்றுகரமாக ஒலிக்கும் போது ஏவல்வினையாயும் வரும் என நச்சினார்க்கினியர் காட்டியது போலில்லாமல், நாகு எனக்குற்றியலுகரத்திற் கும், நகு எனமுற்றியலுகரத்துக்கும் தனித் தனியாகக் காட்டியதால், 'பிறஉகரம்போல் பொருள் வேறுபடாது' என்பதற்கு வேருகவே பொருள் கொள்ள வேண்டும். ஏன் எனின் ஒரே சொல்லில் வேறுபாடு காட்டாமல் வெவ்வேறு பொருளுடைய வெவ்வேறு சொற்களில் வேறுபாடு காட்டியதால் என்க. இதனல் 'பொருள் வேறுபடாது' என்ற இடத்தில் பொருள் என்பதற்குச் சொல்லின் பொருள் எனக் கொள்ளாமல் உகர உயிராம் தன்மை என்றே கொண்டார் இளம்பூரணர் என்பது விளங்கும்.

எனவே "முற்றியலுகரமொடு" (68) என்ற மேல் நூற் பாவின் உரையில் "பிற உகரம்போலப் பொருள் வேறு படாது" என்று இளம்பூரணர் எழுதியதன் கருத்தின் விளக்கம்,

> "ஈற்றுக் குற்றியலுகரம் ஈற்றுமுற்றியலுகரத்துடன்
> தான்மாத்திரை குறைந்தமையால் உயிராம்தன்மை
> குறையாதது போல நுந்தை என்ற முறைப் பெயரிடத்துக்
> குற்றியலுகரமும் இதழ்குவியாது முற்றியலுகரமாகக்
> கூறிய வழியும் உயிராந் தன்மை வேறுபடாது"

என்பதேயாம். இவ்வாறு கொள்ளாக்கால் இளம்பூரணர் உரை விளக்கமுருது. இதைப் பின்வருவனவற்ருலும் அறியலாம்.

(1) அவை தாம்

> குற்றியலிகரம் குற்றியலுகரம் ஆய்தம் என்ற
> முப்பாற் புள்ளியும் எழுத்தோ ரன்ன (எழு. 2)

என்ற நூற்பாவின் உரையின் கீழ்

> "சந்தனக்கோல் குறுகின விடத்தும் பிரப்பங்கோல் ஆகாது;
> அதுபோலவே இகர உகரங்கள் குறுகினவிடத்தும் அவை உயிர்

ஆகற்பாலன. அவற்றைப் புணர்ச்சி வேற்றுமையும் பொருள் வேற்றுமையும் நோக்கி வேறெழுத்தென்று வேண்டினர் என உணர்க."

என எழுதினர். புணர்ச்சி வேற்றுமைக்காக வேறு வேருகக் கூறினும் உயிரேயாம்; அவ்வாறே குற்றியலிகரம் முற்றியலிகரம் குற்றியலுகரம் முற்றியலுகரம் எனப் பொருள் வேறுபடினும் உயிரேயாம். ஈண்டுப்பொருள் என்பது பெயரை என்க.

(2) "ஈரெழுத் தொருமொழி உயிர்த்தொடர் இடைத்தொடர்
ஆய்தத் தொடர்மொழி வன்தொடர் மென்தொடர்
ஆயிரு மூன்றே யுகரங் குறுகிடன் (எழுத். 407)

என்னும் நூற்பா உகரம் குறுகும் இடங்கள் உணர்த்தியதே யன்றி அவ்விரு மூன்றிடங்களில் வரும் உகரம் குறுகியே வரும் என்றதில்லை. ஆதலின்,

அல்லது கிளப்பினும் வேற்றுமைக் கண்ணும்
எல்லா விறுதியும் உகரம் நிறையும் (எழு. 409)

என்னும் நூற்பா ஈரெழுத் தொருமொழி முதலியவற்றின் ஈற்றில் வரும் என்று கூறுவதால், முன் நூற்பாவில் அவ்வாறு தொடர் மொழியீற்றிலும் இரண்டுகரமும் வரும் என்பது பெறப்படுதலின் அவற்றுள் ஒன்றை-அதாவது முற்றுகரமாகவரும் என்பதை-விலக்கியதாகும் எனக் கொண்டார் இளம்பூரணர். எனவே குற்றுகரம் வரலாம் இடங்களில் குற்றுகரமே வரும் என்பதும் பிற விடங்களில் தான் முற்றுகரம் வரும் என்பதும் அவர் கொள்கை என்னலாம்.

இவற்ருல் மொழியீற்று முற்றுகரமும் குற்றுகரமும் சொற்பொருள் வேறுபடினும் உயிராம் பொருளில் வேறு படாதவாறுபோல நுந்தை யென்ற சொல்லும் முற்றுகர நிலையினும் குற்றுகர நிலையினும் உயிராம் பொருளினும் வேறுபடாது என்று கருதியே "முற்றியலுகரமொடு" என்ற நூற்பாவுக்கு முதலில் உரையெழுதினர் இளம்பூரணர் என்னலாம்.

இனி அவர் அந்நூற்பாவுக்கு எழுதிய இரண்டாம் உரையிலிருந்தும் முதல் உரைக்கு விளக்கம் காணலாம்.

> "இனி இரட்டுற மொழிதல் என்பதனால் பொருள் என்றதனை இடனும் பற்றுக்கோடும் ஆக்கிப் பிற உகரங்கள்
> போல் ஈண்டை யுகரங்கள் இடனும் பற்றுக்கோடும்
> வேறுபடா என்பது கொள்க"

என இரண்டாவதும் ஓர் உரையெழுதினார் அவர். இவ்வுரையில் 'பிற உகரங்கள்போல்' என்பதற்குப் 'பிற உகரங்கள் வேறுபடுவதுபோல்' என்பது பொருளாம். ஈற்றுக் குற்றுகரத்துக்கு இடனும் பற்றுக்கோடும் 'ஈரெழுத்தொருமொழி' என்னும் நூற்பாவிற்குறித்தபடி வேறுதலும் முற்றுகரத்துக்கு வேறுதலும் போல இன்றி நுந்தை என்ற சொற்குக் குற்றுகரமாயவழியும் முற்றுகரமாயவழியும் இடனும்பற்றுக்கோடும் ஒன்றேயாம் என்பது அவர் கருத்து. இவ்வுரை கொண்டும் முதல்உரையில்இளம் பூரணர் கருத்தை யறியலாம்.

குறிப்பு வினை

டாக்டர் வி. ஐ. சுப்பிரமணியம், எம். ஏ., பி. எச்டி.
(தமிழ்த்துறைத் தலைவர், கேரளாப்பல்கலைக்கழகம், திருவனந்தபுரம்.)

அண்மையில் 'தமிழ்க்கல்சர்' என்ற சஞ்சிகையில் (Vol. VIII No. 2 1959) டாக்டர். மு. வரதராசனார் 'குறிப்பு வினை' என்ற கட்டுரையில் சில அரிய கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார். அதில் குறிப்புவினையைத் தெரிநிலைவினை போன்று வினைச்சொல்லாகக் கருதக்கூடாது என்றும் சொல் நிலையில் அது பெயர்தான் என்றும் கூறியிருக்கிறார். தமது முடிபிற்குத் துணையாக ஐந்து காரணங்களையும் காட்டியிருக்கிறார், அவை வருமாறு: (1) பெயர்ச்சொல்

வினையடியாக நிற்றல் இயற்கையன்று. குறிப்பை வினைச் சொல்லாகக் கருதின் எல்லாப்பெயர்களும் வினையடிகளாகும். (2) அண்ணன் புலவர் விழுது ஆகிய சொற்களில் குறிப்புவினைகளிற் காணப்படுவதுபோல் திணை பால் காட்டும் விகுதிகள் இருக்கின்றன. அவற்றையும் வினையென்றே கூற நேரிடும். (3) பயனிலையாக நிற்கும் எதுவும் வேற்றுமை ஏலாது. குறிப்புவினைபோன்று பெயர்ப்பயனிலைகளும் ஏலா. எனவே அதன்காரணமாகக் குறிப்பை வினையென்று கூறல் தக்கதன்று. (4) பயனிலையாகக் குறிப்பு வினை நிற்றல்போன்று பெயர்ச்சொல்லும் நிற்கும். முன்னதை வினையெனக் கூறின் பின்னதையும் வினையெனவே கூற நேரிடும். (5) வினை, வினைக்குறிப்பு ஆகியவற்றிற் போல் பெயர்ப்பயனிலைகளிலும் பகுதிப்பொருள் சிறந்து நிற்கும். எனவே, அவற்றையும் வினையாகக் கருத நேரிடும். இந்த ஐந்து காரணங்களால் குறிப்புவினை, பெயர் தான் என்று தமக்கே உரிய இனிய நடையில் வாதித்திருக்கிறார்.

ஒவ்வொரு காரணத்தை விளக்கும்போதும் மொழி பற்றிய பொதுவான கோட்பாடுகளையும் ஆசிரியர் குறித்திருக்கிறார். அவற்றின் நிறைகளை இப்போது கவனியாமல் வாதங்களை மட்டும் ஆராய்வோம்.

முன் குறித்த கட்டுரையில் தோன்றிய ஐயங்களை ஆசிரியருக்கு எழுதி வினவியபோது அன்புடன் இரு கடிதங்கள் வாயிலாக அவற்றை விளக்கியருளினார். அதற்காக நான் முதலில் அவருக்கு நன்றி தெரிவித்துக் கொள்ள வேண்டும்.

---

(1) குறிப்பு வினை பெயரடியில்இருந்து மட்டும் பிறப்பதன்று. தொழிற்பெயரடியில் இருந்தும் இடைய்டியில் இருந்தும் பிறக்கிறது. எடுத்துக்காட்டாக எண்ணலை = எண்ணத்தையுடையை (புறம் 138-6) ஆற்

றலை = ஆற்றலையுடையை (புறம் 33-9) ஆர்கையர் = உண்பவர் (புறம் 394-6) நோக்கலை = நோக்கத்தையுடையை (பதிற் 51-36) அனையை = அத்தகையை (புறம் 4-17) அற்று = அத்தகைத்து (புறம் 54-13).[1]

மலர், பூண் முதலியவை பெயருக்கும் வினைக்கும் பொதுவான அடிகள் எனக் கொள்வது நன்றன்று வேற்றுமை ஊருபேற்பன வெல்லாம் பெயர் என்றும், வேற்றுமை ஏலாது கால இடைநிலையேற்பன வினையென்றும் தொல்காப்பியரும் பின்னுள்ளோரும் கூறுவதால் மலர் பூண் முதலியவற்றை வினையடியாகவே கொள்ள வேண்டும். வினையடிகள் பெயராக்கு விகுதிகள் பெற்று (Derivative Suffiyes) பெயராக மாறும். மலர்தல், பூணுதல், மலர்ச்சி முதலியவை பெயராக்கு விகுதி பெற்ற வினைப் பெயர்கள். குறிப்பிட்ட சில பொருள்களைக் குறிக்கும்போது பெயராக்கு விகுதிகள் சில வினையடிகளில் வருவதில்லை. இதனைப் புணர்ந்து கெட்டது என்பர் சிவஞானசுவாமிகள் (தொ. சூ. வி. ப. 46). இவ்வாறு புணர்ந்து கெட்ட விகுதிகளை மேல் நாட்டு மொழி நூலாரும் பாணினியைப் பின்பற்றி பூஜ்யத்தால் (Zero) குறிப்பர். எனவே மலர், பூண் என்ற பெயர்களில் வினையடிகளும் பெயராக்கு விகுதியான பூஜ்யமும் இருக்கின்றன. மலர் + () பூண் + (). பெரும்பான்மையான வினையடிகள் பெயராக்கு விகுதிபெற்றே வருவதையும் நோக்குக. இவ்வாறு பூஜ்ய விகுதியை ஏற்பதால் தொல்காப்பியர் பெயர் வினையென்று பகுத்த அடிப்படையின் பெருமையும் நன்கு விளங்கும். வினையாலணையும் பெயரில் கால இடைநிலைகளையடுத்து பெயராக்கு விகுதி

(1) பதிற்றுப்பத்தின் மொழிநிலையை ஆராய்ந்து வரும் திரு. ச. அகஸ்திலிங்கம், பற்றுப்பத்து உருவங்களைத் தந்து உதவியதோடு உரியடியில் இருந்தும் குறிப்பு முற்று பிறக்க வல்லது என்பதற்கு உதாரணமாக நடியைய் அச்சத்தைச் செய்வை (பதிற் 51-37) என்பதையும் சுட்டிக் காட்டினர். உரிச்சொல் எவ்வித விகுதியும் ஏலாதது என்று நான் பகுத்துக் கொள்வதால் கடி எனக்கு உரிச்சொலன்று.

யொன்று சேர்ந்திருக்கிறது. அதனாலேயே இடம் பால் எண் காட்டும் விகுதி பெரும்பாலான வினையாலணையும் பெயர்களில் நீண்டிருக்கிறது.

பெயரடியில்இருந்து வினைகள் பிறப்பதும் அருகிய வழக்காகக் காணப்படுகிறது. எடுத்துக்காட்டாகக் காதலித்தேன் என்ற வினைமுற்று காதல் என்றபெயரடியில் இருந்து பிறக்கிறது. காதலித்து என்னும் வினையெச்ச உருவம் கலித்தொகை 96–18 இல் காணப்படுகிறது. கோயில் மூத்த திருப்பதிகத்தில் மாணிக்க வாசகர் தேனிப்பார் = தேன் போல் வார் (9) எனப் பெயரடியை வினையாகப் பயன் படுத்துவதையும் நோக்குக. முயற்சித்தேன், கவர்ச்சித்தேன் என்பனவற்றிற்குப்பதிலாக முயன்றேன், கவர்வித்தேன் என்ற எளிய உருவங்கள் காணப்படுவதால் முன்னவை வழுவாகக் கருதப்பட்டன. பெயரடி காரணமாக வழுவாயின எனல் பொருந்தாது. பெயரடியில் இருந்து பிறக்கும் வினைகள் அனைத்தும் காலங் காட்டும் இடைநிலையின் முன்னர் இகரமாகிய வினையாக்கு விகுதியை ஏற்பதையும் கவனிக்க. இவ்வாறு வினையடியாகப் பெயர் பயன்படுவதும் அருகிய வழக்காக இருந்திருக்கிறது. அருகிய வழக்கெல்லாம் வழுவிய வழக்கல்ல.

(2) அடுத்து ஆசிரியர் கூறியுள்ள வாதம் மிக முக்கியமானது. அண்ணன், புலவர், விழுது முதலிய பெயர்களின் ஈற்றிலுள்ள விகுதிகளும் வந்தனன், வந்தனர், வந்தது; கரியன், கரியர், கரியது ஆகிய தெரிநிலை குறிப்பு வினைகளின் விகுதிகளும் ஒன்றே என்கிறார். முன்னுள்ள அண்ணன், புலவர், விழுது ஆகிய மூன்றும் பயனிலையாக மூவிடங்களுக்கும் வரும். பின்னுள்ளவை வாரா. நான் அண்ணன், நாம் புலவர், நான் விழுது; நீ அண்ணன், நீர் புலவர், நீ விழுது; அவன் அண்ணன், அவர் புலவர், அவன் விழுது (அவன் மரம் என்பது போல) என்பன எடுத்துக் காட்டுகளாம். நான் வந்தனன்,

நான் கரியன், நீ வந்தனன், நீ கரியன் [2] என வாரா. நான் வந்தேன், நான் கரியேன், நீவந்தனை, நீ கரியை என்றே வரும், எனவே முன்னுள்ளவற்றில் இட விகுதியில்லை. பின்னுள்ளவற்றில் இடவிகுதி யிருக்கிறது. முன்னுள்ளவை மூன்றும் இடவிகுதி பெற்று வரும்போது அண்ணனேன், புலவரேம். விழுதேன்; அண்ணனை, புலவரிர், விழுதை (அண்ணனன்*) அண்ணன் (புலவரர்*) புலவர் (விழுத்து*) விழுது என்றே நிற்கும். உடுக்குறியிட்ட உருவங்களில் ஒலியொற்றுமையுடைய இரண்டு விகுதிகள் அடுக்கி வருவதால் அவற்றுள் ஒன்று மறைந்திருக்கலாம். எது எவ்வாருயினும் அண்ணன், புலவர், விழுது ஆகிய மூன்றிற் காணும் விகுதிகளுக்கும் வந்தனன் கரியன் ஆகியவற்றிற் காணும் விகுதிகளுக்கும் வேறுபாடு இருப்பது நன்கு தெளிவாகும்.

விழுது என்பதில் உள்ள துகரம் அஃறிணை ஒருமையாயின் 'அவன் மரம்' என்பதுபோல் அவன் விழுது எனப் பயனிலையாக அஃறிணை ஒருமையல்லாத எழுவாயின் பின் வராது. வரவே, விழுது என்பதில் உள்ள துகரத்தை ஒன்றில் பெயராக்கு விகுதியாகக் கருதலாம். அல்லது, காது மாது, சாது, போது ஆகியவை போலப் பகாப்பதமாகக்கொள்ளலாம்.

மேற்கூறியவற்ருல் அண்ணன், புலவர், விழுது முதலியவை பெயராக எண்ணப்படுவதால் குறிப்புமுற்றையும் பெயராகத்தான் கருதவேண்டும் என்று கூறுவது பொருந்தாது.

(3) ஆசிரியர் காட்டும் மூன்ருவது நான்காவது வாதங்கள் வாக்கிய நிலை இலக்கணத்தைச் (syntax) சேர்ந்தவை சொல்லதிகாரத்தில் தொல்காப்பியனுர் வாக்கிய

---

(2) நான் கரியன், நீ கரியன் என்பன பேச்சுவழக்கில் அருகிக் காணப்படினும் பழைய இலக்கியங்களில் நான் கரியேன், நீ கரியை என்றே குறிப்புவினைகள் வருகின்றன.

நிலை இலக்கணத்தையும் சொல்நிலை இலக்கணத்தையும் (Morphology) சேர்த்துக் கூறுகிறார். இதைத் தெய்வச்சிலையார் 14.107 (R. வேங்கடாசலம் பிள்ளை பதிப்பு) குறிப்பதையும் நோக்குக. வாக்கிய நிலை இலக்கணத்தில் பதத் தொடர்ச்சியையும், பதப் பகுப்புகளையும் (classes) கூறுவது வழக்கம். சொல் நிலையில் பத உறுப்புக்களையும் அவற்றின் வகைளையும் விவரிப்பது இயல்பு. தொல்காப்பியர் இவ்விரு நிலைகளையும் வேறு வேருக அறிந்திருந்தார் என்பதற்கு அவர் கையாளும் குறியீடுகளே சான்ருகும். பெயர், வினை, இடையரி என்று சொல்லப் பகுத்திருப்பதும் எழுவாய், பயனிலை, பெயரெச்சம் வினையெச்சம் எனப் பத வருகையை வைத்து வாக்கிய நிலையில் குறியீடு செய்திருப்பதும் மேற் குறிப்பிட்டதற்குச்சான்ருகும். எனினும் சொல் நிலையையும் வாக்கிய நிலையையும் கலந்து ஒரதிசாரத்தில் கூறுவதற்குச் சில காரணங்களை ஊகிக்கலாம். நவீன இடமாற்று வாக்கிய இலக்கண ஆசிரியர்கள் (Transformation Analysts) கருதுவது போல் வாக்கிய நிலையையும் சொல் நிலையையும் பிரித்துக் கூறவேண்டியதில்லை என்று தொல்காப்பியனுர் கருதியிருக்கக்கூடும். அல்லது, சொல் நிலைப் பகுப்புகளுக்கும் வாக்கிய நிலைப் பகுப்புகளுக்கும் எண்ணிக்கையில் அதிக வேறுபாடில்லாததால் இரண்டையும் ஒன்ருகச் சேர்த்துக் கூறியிருக்கக் கூடும். இல்லையெனில் தொல்காப்பியர் தாம் முன் மாதிரியாகக் கொண்ட ஐந்திர விபாகரணத்தின் அமைப்பு முறையாக இது இருந்திருக்கலாம்.

கொண்ட பகுப்புகளை நான்கு பெரும் பிரிவுகளாகப் பகுக்கலாம். முதலில், வேற்றுமை உருபு ஏலாது முற்றி நிற்பன பயனிலை. இரண்டாவது, வேற்றுமை உருபு ஏலாது முற்

ருது நிற்பன எச்சம். மூன்ருவது வேற்றுமை உருபு ஏற்று முற்ருது நிற்பன வேற்றுமைப் பகுப்புக்கள். நான்காவது முன் மூன்றில் அடங்காதவை. இந் நான்கு பிரிவில் பயனிலையாக வருவன வெல்லாம் முதற் பிரிவில் அடங்கும். இரண்டாவது பிரிவில் அடையாகும் வினைகளும் அவற்றின் தொகைகளும் அடங்கும் மூன்ருவதில் வேற்றுமை ஏற்ற பெயர்களும் பெயர்களும் பெயர்த்தொகைகளும் அடங்கி நிற்கும். நான்காவதில் உரிச்சொல்லும் தனித்து நிற்கும் இன்பச்சொல்லும் அடங்கும்

மேற்குரித்த பகுப்பைத் தெளிவாகத் தெரிந்துகொண்டால் பயனிலையாக வரும் எதுவும் வேற்றுமை ஏலாது என்பது விளங்கும் அதைப்போலவே மூன்ருவது பிரிவில் வரும் எதுவும் வேற்றுமை ஏற்கும். எனவே வேற்றுமை ஏலாமை பயனிலையின் இலக்கணமே ஒழிய அங்கு வரும் சொற்களின் இலக்கணமன்று சொன்னிலையில் பெயராக இருப்பது வாக்கிய நிலையில் வேற்றுமை ஏவாதும், சொன்னிலையில் வினையாக இருப்பது வாக்கிய நிலையில் வேற்றுமை ஏற்றும் வரும். இரண்டும் வேறு வேறு நிலைகள் இதை இங்கு மறந்து விடலாகாது.

(4) ஐந்தாவது ஆசிரியர் கூறும் வாதத்துடன் நாமும் ஒன்றைச் சேர்க்க முடியும். சொல்லில் எவ்விடத்தில் பொருள் சிறந்து நிற்கிறது என்று திட்டமாகக் கூறுவது இயலாது. சூழ் நிலைக்கேற்ப பொருட் சிறப்பு திரிவதால் அதை அடிப்படையாகக்கொண்டு சொல் நிலையிலோ, வாக்கிய நிலையிலோ பாகுபாடு எதுவும் செய்தால் இயலாது.

இலக்கணமமைப்பதைச் சதுரங்க ஆட்டத்துடன் அடிக்கடி ஒப்பிட்டு சுவிஸ் நாட்டில் வாழ்ந்த டி சௌசூர் என்ற மொழியியல் அறிஞர் பேசுவார். சதுரங்க ஆட்டத்தில் காய்களும் ஆட்ட விதிகளும் இருக்கின்றன. ஒவ்வொரு காயையும் நகர்த்தும்போது மூன்று வகையான விளைவுகள் தோன்றக் கூடும். ஒன்று, எளிதில் வெற்றி கிடைப்பதற்கு வழியமைப்பது. இரண்டு, இருவருக்கும் வெற்றியில்லாமல் சிக்கலைத் தோற்றுவிப்பது. மூன்றுவது, தோல்விக்கு வழிவகுப்பது. நல்ல ஆட்டக்காரர், காய்களின் நிலையை இந்தக் கோணங்களில் நின்று ஆராய்ந்த பின்னரே காயை நகர்த்துவார். இந்தக் காயை இங்கு நகர்த்தினல் இப்போதே எதிரியின் இரண்டு காய்கள் கிடைத்துவிடும் என்று நினைத்து முயற்சியை வீணுக்கமாட்டார். இறுதியில் வெற்றி கிடைக்குமாயின் இரண்டு காய்களை இப்போது இழப்பதற்கும் தயங்கமாட்டார். இலக்கண ஆசிரியர்களும் சதுரங்க ஆட்டக்காரர்களைப்போன்றவர்களே. இலக்கணத்தில் ஒவ்வொரு உறுப்பை அமைக்கும் போதும் அழிக்கும் போதும் மொத்த இலக்கண அமைப்பை மனதிற்கொண்டு முடிவு செய்வர். இல்லை யெனில்,அவர்களது இலக்கணத்தில் மூன்று வகையான குறைபாடுகள் நேரக்கூடும், ஒன்று எல்லா சொல்லுருவங்களுக்கும் இலக்கணம் அமையாது போய்விடும். இரண்டு, நேரத்திற்கேற்ப விதிவிதித்து முரணன விதிகள் பெருக நேரிடும். மூன்று, விதிகள் பெருக இலக்கண சிக்கல் நிறைந்தாகிவிடும். முரணத விதிகளால் முற்ற உரைக்கும் எளிய இலக்கணமே இலக்கண ஆசிரியர்களின் குறிக்கோளாக இருக்க வேண்டும்: இந்த நினைவுடன் குறிப்பு வினைபற்றி நாம் மேலும் பார்ப்போம்.

சொல் நிலையிலும் வாக்கிய நிலையிலும் குறிப்பு வினை, பெயரிலிருந்தும் இடையிலிருந்தும், வினையிலிருந்தும் மாறுபட்டது.

பெயருக்கு இடவிகுதியில்லை. குறிப்பு வினைக்கு உண்டு. இதை முன்னரே கண்டோம். பெயரில் இருந்து குறிப்புப் பெயரெச்சமும் குறிப்புப் பெயரெச்சத் தொகையும் தோற்றுவித்தல் இயலாது. சரியன் என்ற பண்படிக் குறிப்பு வினையிலிருந்து சரிய சார் என்ற குறிப்புப் பெயரெச்சத்தையும் தொகையையும், தோற்றுவித்தல் இயலும். தெரிநிலையிலிருந்தும் இவை இயலும்: வந்தான் வந்த வரு. தெரிநிலையும் இடம் காட்டு விகுதியேற்கும். இதையும் முன்னரே கண்டோம். குறிப்பைப்போல், அணையும் பெயர்களையும் தோற்றுவிக்கும். மலையோன், வந்தோன் ஆகியவை குறிப்பு தெரிநிலை ஆகியவற்றின் வினையாலணையும் பெயர்களாம். வினைமுற்றுள் செய்யும் என்பது பொதுவாக வருவது போல் குறிப்பு முற்றுள் வேறு, உண்டு, இல்லை ஆகியவையும் பொதுவாக வரும். என்னும், குறிப்பும் தெரிநிலையும் கீழ் வரும் வழிகளில் வேறுபடுகின்றன. தெரிநிலையில் பல, பிறவினை காட்டும் இடைநிலையேற்று பிறவினையாகும்: சேர்ந்தேன் சேர்த்தேன். குறிப்பு ஏற்காது. தெரிநிலை கால இடை நிலையேற்கும். குறிப்பு ஏலாது. இதனை ஆசிரியர் தெரிவித்திருக்கிறுர். தெரிநிலையில் இருந்து வினையெச்சம் பிறக்கும். வந்தான் வந்து வர. குறிப்பில் இருந்து பிறக்காது. தெரிநிலை-தல், கை முதலிய தொழிற் பெயர் விகுதியேற்று பெயராகும். குறிப்பு ஆகாது. இடைச் சொல்லில் இரண்டு சேர்ந்தே இடம் பால் எண் விகுதிபேற்கும்:

அன்னன். இடைச் சொல்லிலிருந்து, பெயரெச்சம் பிறக் காது. ஆனால் இடைச்சொல்லடியாகப் பிறந்த குறிப்பி லிருந்து பெயரெச்சம் பிறக்கும்: அன்ன. எனவே குறிப்பைப் பெயர்வினை இடையுள் எந்தப் பிரிவிலும் அடக்க இயலாது. ஒரு தனிப் பிரிவாகக் கொள்ளவேண்டும் என்பது வெளிப் படை. இந்தத் தனிப்பிரிவைப் பெயரின் கீழும் வினையின் கீழும் இடையின் கீழும் குறிப்பது ஒன்று. அல்லது பெரும் பான்மையான இயல்பு நோக்கி வினையின் கீழ் குறிப்பது மற்றொன்று. முன் முறையாயின், மும்முறை குறிப்பு வினை பற்றிய விதிகளைக் கூற நேரிடும். பின் முறையாயின் கீழ் மட்டும் குறிப்பு வினையின் இயல்பைக் கூறி அதன் விதிகளை ஒருமுறை கூறினால் போதும். சொல் நிலையில் தொல்காப்பியர் இந்த எளிய வழியை மேற்கொண்டார் எனலாம்.

வாக்கிய நிலையிலும் குறிப்பு வினையென ஒரு பகுப்பை நிறுவத்தான் வேண்டும். ஏனெனில் குறிப்பு வினை அங்கும் தனிப் பகுப்பாக இயங்குகின்றது. பயனிலையாகவும் வேற் றுமை ஏற்றும் பெயர் வருவது போன்று குறிப்பு வினையும் வரும்: அவன் மரம் அவன் மலையன்: மரத்தைக் கண்டேன், மலையனைக் கண்டேன் ஆகியவை அவற்றிற்கு எடுத்துக் காட்டு கள். ஆனால் பெயர்ப் பயனிலை, பெயர் கொள்ளும் வேற் றுமைகளை மட்டும் கொண்டு முடியும். அது இராமனது யானை. ஆனால் அதனை மரம் எனல் முடியாது. குறிப்பு வினை தெரி நிலைபோல ஏனைய வேற்றுமைகளையும் கொண்டு முடியும். அதனை உடையேன். யான் இராமனது மலையேன். ஆனால் தெரி நிலை வினை போல வினையெச்சத்தின் முடிபாகக்

குறிப்பு, மிகப்பெரும்பாலும் வருவதொன்றன்று. வந்து சேர்ந்தேன் எனலாம் வந்து மலையேன் என்று முடித்துக்கூற முடியாது. பெயரைப்போல் பெயரெச்சத்தையும் தொகைகளையும் குறிப்பு வினை ஏற்கும். வந்த மலையேன் தனித்து நிற்கும் இடைச் சொல், எழுவாய்ப் பகுப்புக்களையோ எச்சப் பகுப்புக்களையோ வேற்றுமைப் பகுப்புக்களையோ அடுத்து வரும். குறிப்பு வினை அவை மூன்றாகவும் பயன்படும். எனவே குறிப்புவினை பெயரை ஒத்தும், ஒவ்வாமலும் வினையை யொத்தும் ஒவ்வாமலும் இடையை ஒத்தும் ஒவ்வாமலும் வாக்கிய நிலையில் பயன்படுகிறது. தனிப் பிரிவாக இயங்கும் இதனை வினையியல்பு பெரிதும் கொண்டிருப்பதால் ஒருவகை வினையாகத் தொல்காப்பியர் கருதியிருக்கலாம்.

இவரைப் பார்த்ததில், குறிப்பைச் சொல் நிலையில் பெயராக மட்டும் கூறுவது இயலாது என்றும், வாக்கிய நிலையிலும் சொல்நிலையிலும் பெயர் போலவும், இடை போலவும் வினைபோலவும் இயங்குவது என்றும் பெரும்பான்மை இயல்பு நோக்கித் தொல்காப்பியர் சொல் நிலையிலும் வாக்கிய நிலையிலும் ஒருவகை வினையாகக் கருதினார் என்பதும் தெளிவாகும். அத்துடன் தொல்காப்பியரின் இலக்கண ஆற்றலையும் கூர்த்த மதியையும் நாம் அறிந்து பாராட்டுதற்கு 'குறிப்பு வினைப்' பகுப்பு இடந்தருகின்றது.

நல்லவர் யாவரோ?

"கீரன் தந்தை"

அவனை அவள் கண்டாள்; அவளை அவன் கண்டான். இருவரில் முதலில் கண்டவர் எவர் என்ற வினவிற்கு விடை காண முடியாது. அவனை அவள் முன்பறியாள்; அவனும் அவ்வாறே! இவ்விருவரின் பெற்றோர்களும் உறவின் முறையினரல்லர். ஆயினும் காதல் கொண்டனர். வெறும் பேச்சளவில், எழுத்தளவில் காதல் கொண்டவரிலர்; மெய்மைக் காதலே கொண்டனர். செம்மண் நிலத்தின்கண் பெய்யும் மழைநீர் மண்ணோடு கலந்து அதன் தன்மையைப் பெறுவது போல, வேறுபட்ட நெஞ்சங்கள் ஒன்றோடொன்று கலந்து ஒன்று பட்டுவிட்டன.

எனவே, குறிப்பிட்ட இடத்தில் பிறர் அறியாதவாறு இருவரும் மனம்விட்டுப் பேசுவர்: இன்பப் பொழுது போக்குவர். முதலில் இவ்விருவர்க்கு மிடையே ஏற்பட்ட நட்பைத் தெரிந்து கொண்டவள் தலைவியின் தோழியேயாவாள். இந் நட்பு வளர்தற்குத் துணைபுரிந்தவள் அவளே என்று கூறினும் மிகையன்று.

தோழியின் கனிந்த உள்ளத்தால் எத்தகைய இடையூறுமின்றித் தலைவனும் தலைவியும் தம்முட் கலந்து பழகுவாராயினர். நட்பு வளர்பிறைபோல் வளர்வதாயிற்று. நட்பின் உயர்வை உரைக்க வேண்டுமாயின், அது, நிலத்தை விடப் பெரிது எனலாம்; வானைவிட உயர்ந்தது எனலாம்; கடலை விட ஆழ்ந்தது எனலாம்! இத்தகைய உயரிய நட்புக்

குரியவர்கள், மணம் முடிக்காமல் எத்துணை நாட்கள் பிற ஏறியாமல் கூடுவது என்று ஏண்ணுகிறாள் தோழி; தலைவியின் கருத்தை அறிகிறாள். அறிந்த பின்னர்த் தலைவனிடம் கூறுதற் கேற்ற அமயத்தை எதிர்நோக்குகிறாள். அவ்வாறே ஒருநாள், தலைவனைத் தனித்தே காண்கிறாள். "தலைவனே! நீயும் என்தோழியும் கொண்ட நட்பை ஊரவர் அறிந்து கொண்டனர்; அதனால் பழிதூற்றத் தலைப்பட்டு விட்டனர். ஆதலின் விரைவில் தலைவியை மணமுடித்துக் கொள்க!" என்று கூறுகிறாள். ஆனால் தலைவனோ, "விரைவில் அவளை மணமுடிக்க ஆவன செய்கிறேன், அதுகாறும், பிறர் அறியா வண்ணம் இரவின்கண் வந்து அவளைக் காண்பதற்கு நீதான் துணைசெய்ய வேண்டும்!" என்று இரந்து கேட்கிறான். தோழியின் அருள் உள்ளம் அவ்வாறு செய்ய உடன்படுகின்றது.

இவ்வாறு சில நாட்கள் கழிந்தன. தலைவன் மணமுடித்துக்கொள்வதாகத்தோன்றவில்லை. இதற்கிடையில் அயலார் சிலர் தலைவியின் மணவினைக்கு முயற்சிசெய்யத் தொடங்குகின்றனர். தலைவியின் இளப்பாங்கை அறியாத பெற்றோரும் அவளை மணமுடித்துத் தருதற்குரிய வழிவகைகளை மேற்கொள்ளலாயினர். இது கண்ட தலைவி செய்வதறியாது திகைத்தாள்; கண்கலங்கினாள்; ஆற்றொணாத் துயரங் கொண்டாள். தலைவிபடும்பாட்டைக் கண்டாள் தோழி; அவள் துயர் போக்க எண்ணினாள். எண்ணத்தின் விளைவாக அரியதொரு கருத்துத் தோன்றியது. "இன்றிரவு தலைவன் வருவான்: அவன் திரும்பிச் செல்லுங்கால் தலைவியையும் உடன் அழைத்துச் செல்லுமாறு செய்துவிட வேண்டும். அதுவே தக்க வழி!"—இதுவே அவள்கொண்ட கருத்து.

[தொடரும்]

மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் நூல்கள்

I. சங்க வெளியீடு

			ரூ.	அ.	ப.
4.	வைத்தியசாரசங்கிரகம்	—	5	0	0
5.	பன்னூற்றிரட்டு	—	3	0	0
8.	தமிழ்ச்சொல்லகராதி மூன்றும் பாகம்	—	5	0	0
10.	தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை)	—	1	12	0
11.	திருவருணைக்கலம்பகம்	—	0	6	0
13.	கலைசைச்சிலேடை வெண்பா	—	0	6	0
15.	திருவாரூர் நான்மணிமாலை	—	0	4	0
16.	ஸ்ரீகிருஷ்ணசரித்திரவிமர்சனம்	—	1	4	0
17.	பன்னூற்றிரட்டு (தொகுப்பு)	—	0	4	0

II. செந்தமிழ் வெளியீடு

1.	ஐந்திணையைம்பது (உரையுடன்)	—	0	4	0
2.	களுநால் (5) இனியது நாற்பது (உரை)	—	0	3	0
4.	புலவராற்றுப்படை	—	0	3	0
7.	திருநூற்றந்தாதி (உரையுடன்)	—	0	6	0
8.	திணைமாலை நூற்றைம்பது (உரையுடன்)	—	0	8	0
9.	அநுமான விளக்கம்	—	0	10	0
10.	அட்டாக யோகக்குறள்	—	0	2	0
12.	பன்னிருபாட்டியல்	—	0	12	0
13.	நான்மணிக்கடிகை (பழைய உரை)	—	0	4	0
14.	முத்தொள்ளாயிரச்செய்யுட்கள்	—	0	3	0
16.	திருவாரூருலா	—	0	8	0
17.	சுகசந்தர்சனதீபிகை	—	0	12	0
18.	இயற்கைப்பொருட்பாடம்	—	0	4	0
19.	தேவையுலா	—	0	3	0
21.	சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்)	—	0	8	0
22.	திருக்கலம்பகமூலமும்உரையும்	—	1	0	0
23.	விக்கிரமசோழனுலா	—	0	8	0
24.	குருமொழி வினவிடை	—	0	1	0
25.	கேசவப்பெருமாள் இரட்டைமணிமாலை	—	0	2	0
26.	திருத்தணிகைதிருவிருத்தம்	—	0	1	0
27.	மதுரைத் திருப்பணிமாலை	—	0	8	0
30.	ஞானமிர்தக்கட்டளை	—	0	3	0
32.	மரீஷாபஞ்சகம்	—	0	8	0
36.	உவமானசங்கிரகம்	—	0	1	0
37.	மாறனலங்காரம் மூலமும் உரையும்	—	4	8	0
38.	திருப்புல்லாணிமாலை	—	0	2	0

40.	திருமாலிருஞ்சோலைமலை அழகர் பிள்ளைத்தமிழ்	—	0	8	0
41.	பொருட்டொகை நிகண்டு	—	0	6	0
42.	அகராதி நிகண்டு	—	0	12	0
43.	மேகவிடு தூது	—	0	2	0
44.	திருக்குற்றாலமாலை	—	0	2	0
45.	தண்டலையார் சதகம்	—	0	4	0
46.	இராமோதந்தம்	—	0	3	0
47.	பழமொழி மூலமும் பழைய உரையும் (2-வது 100)		1	0	0
48.	சேதுநாடும் தமிழும்	—	0	6	0
52.	கூடற்புராணம்	—	0	10	0
53.	திருவள்ளுவர் (ஆங்கிலம்)	—	0	6	0
54.	அரும்பொருள் விளக்க நிகண்டு	—	1	4	0
55.	மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும்	—	0	12	0
56.	பாப்பாவினம்	—	0	10	0
57.	மதுரை மும்மணிக்கோவை	—	0	5	0
58.	பழனிப் பிள்ளைத்தமிழ்	—	0	3	0
59.	கடம்பர் கோயில் உலா	—	0	6	0
60.	சங்கரநயினார்கோயில் அந்தாதி	—	0	6	0
61.	கலைசைக்கோவை	—	0	12	0
62.	பெருந்தொகை	—	5	0	0
63.	சூடிக்கொடுத்த நாச்சியார் தோத்திரப்பாமாலை	—	0	5	0
64.	சிராமலைக்கோவை	—	0	12	0
65.	மத்யவியாயோகம்	—	0	2	0
67.	அமிர்தரஞ்ஜநி	—	0	2	0
69.	பொன்வண்ணத்தந்தாதி மூலமும் உரையும்	—	0	8	0
70.	திருச்சிறுபுலியூருலா	—	0	12	0
71.	துணைத்தலைவர் நினைவுமலர்	—	0	10	0

1. சங்கத்தினின்று திங்கள் ஒரு முறை அரிய பெரிய செய்திகளைக் கொண்டு வெளியாகிவரும் இச் "செந்தமிழ்" இதழுக்கு ஆண்டுக் கட்டணம் ரூ. 4-50. தனிப்படியின் விலை காசு 50 இதுவரை 54 தொகுதிகள் நிறைவாகி யிருக்கின்றன இவற்றுள் 1, 2, 3, 6, 7, 8, 9, 10, 14 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. 12 திங்கட் பகுதிகள் உள்ள பைண்டுசெய்யாத தொகுதி 1 ரூ. 4 வீதம் விற்கப்பெறும். வி. பி. கட்டணம் தனிச் செலவு.

2. சங்கப் பதிப்புப் புத்தகங்களை ஒரு ரூபாய்க்கும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு ரூபா ஒன்றுக்கு 8 காசு வீதம் கழிவு தள்ளிக்கொடுக்கப்படும்.

இவ்விதழ். மதுரைத் தமிழ்ச்சங்கத்திற்காகத் தமிழவேள் திரு. பி. டி. இராசன் (B. A., Bar-at-law. M. L. C.) அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பெற்றுள்ளது.